# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 09 அதிர்வு 101 கார்த்திகை 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

**Budget Friendly**
Home Improvements Pty Ltd
Quality Renovation Work
0400 287 198

# பொங்குதமிழ்-மெல்பேர்ண்






ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව சம்பத் வங்கி Sampath Bank
UNION BANK
Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN

# GRACE GROCERY


INDIAN AND SRILANKAN GROCERY

**Our Current Location**

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

**Our New Locations Opening Soon**

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026




# மாவீரர் நாள்:
# ஈழப்போராட்டத்தில் மாணவ அமைப்புகளின் முன்னோடிகள்




● நவீனன்

ஈழ விடுதலைப் போராட்டத்தில் தாய்நாட்டுக்காக தமது உயிரை ஈந்த போராளிகளின் தியாகத்தை போற்றும் நாளே மாவீரர் நாளாக தாயகத்திலும், சர்வதேச நாடுகளிலும் அனுஷ்டிக்கப்படுகிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களையும், அவர்களோடு சேர்ந்து போரிட்டு உயிர் ஈந்த எல்லைப்படை, துணைப்படை வீரர்களையும், புலிகளோடு இணைந்து உயிர் ஈந்த ஈழப் புரட்சி அமைப்பு உறுப்பினர்களையும், மற்றும் பல ஈழப்போராட்ட போராளிகளையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செய்து, பெருமைப்படுத்தும் நாள் ஆகும். இதற்குரிய நாளாக நவம்பர் 27 ஆம் நாள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினரால் 1989 ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

மற்றைய நாடுகளில் போர்வீரர்களை நினைவுகூரும் நாட்களோடு மாவீரர் நாள் ஒப்பிடத்தக்கது. ஈழத்தமிழர் அனேகர் வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தாலும், ஈழப் போராட்டத்தில் மடிந்த வீரர்களுக்கு மரியாதை செய்யும் நாளாக மாவீரர் நாள் அமைகிறது.


தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய விடுதலைப் போராட்டத்தில் மாணவர் சக்தி ஒரு முக்கியமான பங்களிப்பை வழங்கியது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. மாணவர்கள் சாத்வீக போராட்டங்களில் தொடங்கி, ஆயுதப் போராட்டம் வரை பல்வேறு வகையான போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மாணவர்கள், ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காகத் தொடர்ச்சியாகப் போராடி, தங்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தினர். தமிழ் மாணவர் பேரவை போன்ற அமைப்புகள் மாணவர்கள் மத்தியில் ஒற்றுமையையும், தேசிய உணர்வையும் வளர்ப்பதற்கான முயற்சிகளில் பாரியளவில் ஈடுபட்டன.

### ஈரோசின் தோழர் சோமேஸ்:

தமிழ் மாணவர் பேரவை 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர் ஊர்வலமாக ஆரம்பித்து யாழ். முற்றவெளி மைதானத்தில் அரசியல் பயணத்தை தொடங்கியது.

அன்று நடந்த மாணவர் எழுச்சிக் கூட்டத்தில் மாணவர்கள் தவிர அரசியல்வாதிகள் எவரும் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. மாணவர் எழுச்சி என்பது அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடமாக மற்றும் மாற்று கருத்துருவாக்கமாக அமைய வேண்டும் என்பதுவுமாகவே இருந்தது.




The opening session of the conference. From right to left. Com. E. Ratnasabapathy. Com. Emmanuel M. Colanzo, of ASA, and Com. Joseph of GUYS




தமிழ் மாணவர் பேரவை போன்ற அமைப்புகள், மாணவர்களிடையே ஒற்றுமையையும், தேசிய உணர்வையும் வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தன.

இது ஈழப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கையை வலுப்படுத்தியது.

இத்தகைய மாணவர் போராட்ட அமைப்புகளில் ஈழப் புரட்சி அமைப்பின் மாணவர் அமைப்பு தீவிரமான அரசியல் நிலைப்பாட்டை எடுத்து வந்தது. ஈழப்போராட்டத்தின் முன்னோடியும் EROS மாணவர் அமைப்பான GUYSஇன் முதலாவதாக இன்னுயிர் ஈந்தவருமான தோழர் சோமேஸ்வரனின் 40வது ஆண்டு நினைவுகளில், ஈழப் போராட்டத்தில் மாணவ அமைப்புகளின் முன்னோடிகளான மாவீரர்களை நினைவு கூர வேண்டியது காலக்கடமையாகும்.

யாழ். பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் தோழர் க.சோமேஸ்வரன் 5/1/1985 திருநெல்வேலியில் சிறிலங்கா இராணுவத்தால் படுகொலையானார். மாணவர் இளைஞர் பொது மன்ற (GUYS) வெளியீடான ‘நாங்கள்’ இதழ்களை வெளியிடுவதிலும் தோழர். சோமேஸின் பங்கு அளப்பரியது. நாங்கள் இதழ்களை வாசிக்க நூலகம் நிறுவகம் இணையத்தளத்தை http://www.noolaham.org பார்வையிடலாம்.

ஈழக் கனவுகளுடன் இன்னுயிர் ஈந்த தோழர் சோமேஸ்க்கு வீர வணக்கங்கள்.

### சர்வதேச அரங்கில் தோழர் ராஜா:

ஈழப்போராட்டத்தின் முன்னோடியும் ஈழப் போராட்டத்தை சர்வதேச அரங்கில் முன்னெடுத்துச் சென்றவருமான தோழர் ராஜாவின் (சிவப்பிரகாசம் இரத்தினராஜா) பங்களிப்பை நாம் மறக்க முடியாது.

ஈழப்போராட்டத்தின் முன்னோடியான தோழர் ராஜா ஈழ விடுதலைக்காக சர்வதேச அளவில் மாணவர் அமைப்புகளுடன் இணைந்து போராடினார். அவரது முயற்சியால் 1986இல் GUYSன் ஈழ ஆதரவு சர்வதேச மாநாடு சிறப்புற சென்னையில் நடைபெற்றது.

பல சர்வதேச நாடுகளின் மாணவர் அமைப்புகளுடன் இணைந்து, 1986இல் GUYSன் ஈழ ஆதரவு மாநாட்டை சென்னையில் முன்னின்று நடாத்தியவரும் தோழர் ராஜாவே.

புரட்சிகர பாதையில் பயணித்த தோழர் ராஜா “களச்சூழலின் புறந்தள்ளலால்” 1989 இல் தமிழர் தலைநகர் திருகோணமலையின் போர் சுமந்த வடுக்களுடன் இலங்கை நாடாளுமன்றத்திற்கு அதிபெரும் வாக்குகளுடன் தெரிவானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### GUYS நடத்திய சர்வதேச மாநாடு:

ஆசிய மாணவ ஒன்றியமும் “ASA” (Asian Students Association) ஏனைய பல சர்வதேச முற்போக்கு மாணவ அமைப்புகளும் EROSஇன் மாணவர் அமைப்பான GUYS உடன் இணைந்து 1986இல் “ஈழ ஆதரவு மாநாடு” சென்னையில் நடாத்தப்பட்டது .

சர்வதேச அரங்கில் ஈழவர் பிரச்சினைகளை எடுத்தியம்பவும், ஈழவர் போராட்டத்தினை அங்கீகரிக்கும் செயலாகவும் ‘ஈழ ஆதரவு மாநாடு’ 1986 ஜூன் மாதம் 28ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 4ஆம் திகதி வரை சென்னையில் நடாத்தப்பட்டது.

ஈழ ஆதரவு மாநாடு ஈழப்போராட்டத்தின் நியாயங்களை சர்வதேச அரங்கில் வெளிப்படுத்த உதவியது. ஈழ ஆதரவு மாநாடு GUYSன் சர்வதேச பிரசாரங்களின் மைல் கல்லாகவும் அமைந்தது.




அதுமட்டுமல்லாமல் ஆசிய மாணவ ஒன்றியத்தில் பூரண உறுப்புரிமையுடைய அங்கத்தவராக GUYS சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச மாணவ அமைப்புகளில் அங்கம் வகிக்கும் ஒரேயொரு ஈழவிடுதலை மாணவ அமைப்பாகவும் GUYS விளங்கியது.

தோழர் ராஜா தனது இளம் வாழ்வை ஈழப்போராட்டத்திற்கு அர்ப்பணித்தவர். தோழர் ராஜா 18/12/2008 இல் திருகோணமலையில் இன்னுயிர் ஈந்தார். ■


GOLDEN
CASTLE
FUNCTION CENTRE
GOLDEN CASTLE
FUNCTION CENTRE
An initiative from
Red Chillies
GOLDEN
CASTLE
FUNCTION CENTRE
Wedding
Engagement
Holy Communion
Birthday Parties
Live Events
Gathering
Christening
35 Somerville Rd
Hampton Park, VIC 3976
IF YOU ARE LOOKING FOR
THE PERFECT PLACE
TO CELEBRATE YOUR EVENTS
Contact us
0414 726931
0412 914879

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 101 கார்த்திகை 2025 தொ.பே:1800 960 162

# சுயம் அறியாதை - 100

பிரிவினைவாதிகள் தமிழ்நாட்டில் பழமைவாத கருத்துகளைப் பரப்பி நமது மக்களை சுரண்டி கடந்த 60 ஆண்டுகளாக சுயமாக மற்றும் மரியாதையாக கொள்ளையடிக்க தொடங்கி 100 ஆண்டுகள் நிறைவு பெற்றதை இந்த மாதம் வெகுவிமரிசையாக கொண்டாடியிருக்கிறார்கள். இவர்களின் சுயமரியாதை இயக்கம் என்பது இவரது தலைவரான ஈரோடு வெங்கட்டர் இராமசாமி நாயக்கர் – தனக்கு தானே சூடிக்கொண்டது தான் ( அந்தக்கால காங்கிரசு தலைவர்கள் மத்தியில் பிராமணர்கள் ஆதிக்கத்தை எதிர்த்து வெளியே வந்து இவரே சுயமாக வெளியே வந்து தனக்குரிய மரியாதையை தானே தனக்கு வழங்கி ஆரம்பித்து வைத்தது என்று வரலாறு சொல்கிறது). “சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒரு இயக்கம் 1925ல் என்னால் துவங்கப்பட்டது யாவரும் (?) அறிந்ததேயாகும்”.

“மானமும் பகுத்தறிவும் உடையவனே மனிதன் அ∴திலார் மனித உருவமுள்ள மிருகமே ஆவர் என்ற அறிவுரைப்படி மானமில்லா மக்களே இப்போது தீபாவளி கொண்டாடுகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. “ – ஈ.வெ.ரா – இந்துமத பண்டிகைகள் நூலில் கூறியது. தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கங்கள் 100 வருடம் வளர்ந்த பிறகும் எல்லோராலும் ( கழக தலைவர்களின் வீட்டிலும்) கொண்டாடப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி எல்லோருக்கும் முந்தி முதன்மையாக வாழ்த்து சொல்வதும் இவர்களே – சுயம் அறியாதை 100

கடந்த 55 ஆண்டுகால திராவிட இயக்கங்களின் ஆட்சியில் ( இதில் 100 வருட சுயமரியாதை இயக்கமான திராவிடர் கழகமும் சேர்த்து ) – யாராவது ஒரு தலைவரையாவது, ஒரேயொரு ஆளைப் பற்றியாவது – நேர்மையான வழியில் சம்பாதித்த பணம் மட்டுமேதான் அவர்களிடம், அவர்கள் குடும்பத்தினரிடம் இருக்கிறது என்று சொல்ல முடியுமா? தனது பதவி காலத்தில் எந்தவிதமான ஊழலையும் செய்யவில்லை என்று சொல்ல முடியுமா? அவர்கள் கூட்டத்தில் 0.0000000001% அளவேகூட, ஒரேயொரு கக்கனையோ, காமராஜையோ, ராஜாஜியையோ, பக்தவத்சலத்தையோ காண்பிக்க முடியுமா? – சுயம் அறியாதை 100

சாதிகளை ஒழிக்க நாங்கள் போராடினோம். எங்கள் சுயமரியாதை இயக்கத்தின் தொடர்ந்த போராட்டம் மூலமே ஜாதி வெறி ஒழிந்திருக்கிறது என்பது என்பது 100 ஆண்டு கால பொய். இவர்கள் தலைவர் அவரது கழகத்தை விட்டு வெளியே சென்று அவரை எதிர்த்தவர்களை பற்றி இவ்வாறு சொல்கிறார் . “எனக்கும், எனது தொண்டிற்கும் எதிரிகளாக பலபேர் இருக்கின்றனர். இதெற்கெல்லாம் காரணம் நமது ஜாதி பிறவித்தன்மை தான் காரணம் என்று சொல்லவேண்டியதைத் தவிர எனது 40 வருட பொதுத் தொண்டின் அனுபவத்தில் வேறு எதுவும் சொல்வதற்கில்லை” – சுயம் அறியாதை 100


ஈவெரா கீழ்வெண்மணி விஷயத்தில் எந்த அளவுக்கு சுயமரியாதையுடன் நடந்து கொண்டார் என்பது அவர் வெளியிட்ட அறிக்கையே சாட்சி . அவரிடம் இருந்ததெல்லாம் பார்ப்பன வெறுப்பு . இந்த வெறுப்பு அரசியல் செய்தார் தவிர அவர் தாழ்த்தப்பட்ட மனிதர்களுக்கு அவர் என்றும் சார்பாக இருந்ததில்லை என்பது அவரது கீழ்வெண்மணி குறித்த அறிக்கை மூலம் தெரிந்துகொள்ளமுடியும். அதாவது சுயமரியாதை என்பது தான் சார்ந்த இடைநிலைச் சாதியினை விட்டுக்கொடுக்காமல் இருப்பது மட்டுமே. “‘தொழிலாளர்கள் தங்களுக்கு கிடைக்கிற பொருளாதாரத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கம்யூனிஸ்டு தோழர்கள் உங்களுக்கு கூறாமல் நாட்டிலே கலவரத்தையும், புரட்சியையும் ஏற்படுத்தி இன்றைய தினம் வலதானாலும் சரி, இடதானாலும் சரி, அதிதீவிர கம்யூனிஸ்டுகளானாலும் சரி இந்த ஆட்சியினைக் கவிழ்த்துவிட வேண்டும் என்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.” – சுயம் அறியாதை 100

இவர்கள் விடும் மற்றுமொரு புரட்டு – பெண்விடுதலை என்பது சுயமரியாதை இயக்கத்தினால் மட்டுமே சாத்தியமானது என்று. பெண் விடுதலைக்காக தமிழகத்தில் குரல் கொடுத்தவர்கள் பல பேர் . பாரதி ,திரு.வி.க என்று பல நூறு உதாரணங்களை சொல்ல முடியும். இவர்கள் பெண் விடுதலை ,சமத்துவம் என்று வாய் கிழிய கத்துகிறார்களே . இவர்களது எல்லா இயக்கங்களிலும் பெண்களுக்கு சரிசமமாக பதவிகளை கொடுத்திருக்கிறார்களா ?. அதை விடுங்கள் அனைத்து தகுதி இருந்தும் கனிமொழி கருணாநிதியை ஒதுக்கி ,தனது வாரிசுக்கு மட்டுமே பதவி கொடுத்து அழகு பார்ப்பதில் எங்கே பெண் சமத்துவம் இருக்கிறது? – சுயம் அறியாதை 100

சுயமரியாதை இயக்கம் என்பது இந்து மத மூடநம்பிக்கைகளையும், பிராமணியத்தையும் இந்து மத இதிகாசமான இராமாயணத்தை எதிர்ப்பது மட்டுமே. ராமர் படத்தை எரிப்பது ,இந்து மதக்கடவுள்களைப் பற்றி நாக்கூசும் படி பேசுவது மட்டுமே இவர்களின் வேலை.பிற மதங்களைப் பற்றி இவர்கள் என்றும் விமர்சிப்பதில்லை. அது மட்டுமின்றி ரம்ஜான் காலத்தில் நோன்புகஞ்சி குடிப்பது, கிறிஸ்துமஸ் சமயத்தில் பேராயர்களுடன் சேர்ந்து கொண்டு வாழ்த்து தெரிவிப்பது எல்லாம் கடவுள் மறுப்பு ஆகும். – சுயம் அறியாதை 100

சுயமரியாதை இயக்கம் என்பது தமிழகத்தில் அன்றைய காங்கிரசில் பிராமணர்களின் ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் வெளியே வந்து தங்கள்

(இடைநிலைச் சாதிகளின் ஆதிக்கத்திற்காக ) சுயநலத்திற்காக ஆரம்பித்த இயக்கமாகும். பெண் விடுதலை ,சமூகநீதி ,தீண்டாமை ஒழிப்பு எல்லாம் பெயரளவில் மட்டுமே. மற்ற நல்ல தலைவர்களின் தொடர்ந்த போராட்டத்தினால் கிடைத்த நன்மைகளை எல்லாம் எங்களால் தான் கிடைத்தது என்று காலங்காலமாக பொய் ,புரட்டு ,கயமைவாத இயக்கத்தின் பெயரால் தமிழ்நாட்டில் பல பேரின் சுயமரியாதை இழந்து நிற்கும் நிலை தான் உள்ளது. 2009 ஆம் ஆண்டில் தன் இனம் அழிந்துகொண்டிருக்கும்போது திறம்பட நாடகங்கள் நடத்தி தங்கள் சுயத்தையும், மரியாதையையும் இழந்து நின்றதை தமிழ் அன்னை என்றும் மறக்க மாட்டாள்.



# எதிர்ப்பக்கம்



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

## அரட்டை - அடிக்க இன்னொரு செயலி

நமது பாரதப் பிரதமர் Make In India - ‘இந்தியத் தயாரிப்புகளை பயன்படுத்துவோம்’ என்று சொல்லி பல வருடங்கள் ஆகிற்று. ஆனால் எந்த அளவிற்கு அதனை ஊக்குவித்தார்கள் என்று தெரியவில்லை. என்னிடம் புள்ளிவிபரங்கள் இல்லை. ஆனால் கடந்த 3 வருடங்களில், அதாவது 2022 இல் chatgpt போன்ற செயற்கை நுண்ணறிவு (Generative AI) வந்தபிறகு, செயலிகள், நிரல்கள் உருவாக்குவதில் மின்னல்வேக பாய்ச்சல். நிறைய துளிர் நிறுவனங்கள் அல்லது புத்தாக்க நிறுவனங்கள் (startups ) அலை வீசுகின்றது. உங்களிடம் ஒரு புதிய யோசனை அல்லது கருத்தாக்கம் இருந்தால் போதும் . ஒரே நாள் அல்லது சில மணித்துளிகளில் ஒரு செயலியை உருவாக்கிவிடலாம். ஆனால் அதைச் சந்தைப்படுத்துவதில் தான் அனைத்து சிக்கலும் இருக்கிறது.

மொத்த உலகமே சமூக ஊடகங்களில் திளைக்கும்போது, உடனடி தகவல் தொடர்புக்கு தேவையான செயலிகளின் தேவை தொடர்ந்து வளர்ந்து வருகிறது. facebook, whatsapp, Reddit, discord, snapchat இன்னும் பல செயலிகள் இருந்தால் இவற்றில் உங்கள் அந்தரங்கம் எந்தளவு பாதுகாக்கப்படுகிறது என்பது கேள்விக்குறியே. அதுவும் meta குழுவின் செயலிகளான facebook, whatsapp எந்தளவு உங்கள் தகவல்களை திருடுகின்றன என்பது பார் அறிந்த உண்மை. ஆனால் இதெல்லாம் தாண்டி மனிதன் ஒரு சமூகப்பிராணி. அடுத்தவர்களின் அங்கீகாரத்திற்கு ஏங்குகிறவன். எத்தனை likes, comments மற்றும் shares தெரிந்து கொள்ள எத்துணை முறை refresh செய்கிறோம்.

இவ்வாறான சமயத்தில் இந்தியாவில் அதுவும் நமது தமிழகத்தில் இருந்து ( zoho நிறுவனம் ) ஒரு சமூக ஊடக செயலி, அரட்டை அடிக்க ஒரு அரட்டை App. இந்த செயலியானது zoom, discord மற்றும் whatsapp போன்ற பல்வேறு அரட்டையடிக்கின்ற செயலிகளின் சிறப்பான அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது இதன் சிறப்பு. நீங்கள் ஒரே செயலியில் நமக்கு தேவையான அனைத்து வசதிகளையும் பயன்படுத்த முடிகிறது. முதலில் இதன் UI மிக எளிதாக அனைவரும் பயன்படுத்தும் வகையிலிருக்கிறது. தனிப்பட்ட தகவல்களை பகிர்ந்துகொள்ள pocket என்றொரு வசதி ( whatsapp-ல் இதை நீங்கள் உங்களுக்கே அனுப்பி சேகரித்துக்கொள்ள வேண்டும்). பயமுறுத்தக்கூடிய வகையில் AI மற்றும் விளம்பரங்கள் இல்லை. மிக இலகுவான (lightweight) செயலி என்பதால் எளிதில் நிறுவவும் பயன்படுத்தவும் முடிகிறது. தகவல்கள் இந்தியாவில் சேமிக்கப்படுகிறது. whatsapp போன்ற பகாசுர நிறுவனங்களின் முன்னே போட்டியிட்டு வெல்லமுடியுமா ? ஏனென்றால் அவர்களின் வெற்றிக்கு பின்னே பயனர் எண்ணிக்கை (குறைந்தது 1 பில்லியன் அளவில்). அரட்டை இதுவரை 1 மில்லியன் மக்கள் தரவிறக்கம் செய்துள்ளனர். சங்கிகள் நினைத்தால் இதை இந்திய அளவில் பெரிய அளவில் கொண்டு செல்லமுடியும். செய்யவேண்டும்.

அரட்டை என்ற பெயர் தமிழ் மற்றும் தென்னிந்திய சார்பாக இருப்பதால் வடக்கே எப்படி செல்லும் என்று தெரியவில்லை. தரமான சேவைகளுக்கு எப்பொழுதும் வாடிக்கையாளர் உண்டு மற்றும் நாடிவருவர். இந்த நம்பிக்கை வேம்புவிற்கு நிறையவே இருக்கிறது. பயநர்களும் ஆதரவு தரவேண்டும்.

## சிக்கரி,டிகிரி மற்றும் கும்பகோண காப்பி

மதுரையில் உள்ள பெரும்பாலான டீக்கடைகளில் டீ குடித்து வளர்ந்தவர்கள் நாங்கள். அந்தக் காலங்களில் டீ க்ளாசில் டீ குடிப்பது என்பது பெரிய மனிதர்கள் விஷயம். சிறுவயதில் தூக்குவாளியில் ஒரு டீ வாங்கி அதை ஒரு குடும்பமே பகிர்ந்து குடித்து வளர்ந்தவர்கள். அரை டீ , ஒன் பை டூ , ஒன் பை த்ரீ , சின்ன கிளாஸ் டீ , கட்டண்டீ ,ஏலக்காய் டீ, ஸ்பெஷல் டீ (அதாவது கொஞ்சமாக தண்ணீர் கலந்த பால் கலந்த டீ) என்று பலதரப்பட்ட தேநீர் வகையறாக்கள் குடித்து வளர்ந்த எங்களுக்கு காபி என்பது ஒரு பணக்கார பானம். அது மட்டுமில்லை விடிய விடிய நண்பர்களிடம் பேசிவிட்டு எங்களூரில் 24 மணி நேரம் இயங்கிய சுப்பிர மணி டீக் கடையில் அதிகாலை 4 மணி அளவில் டீ குடித்து விட்டு தூங்காமல் கிரிக்கெட் , சினிமா மற்றும் உள்ளூர் கிசுகிசுக்கள் பேசிய நாட்கள் எல்லாம் பசுமை. அந்த நாட்களில் யாராவது ஒருவர் வந்து காபி வேண்டும் என்று கேட்டாரென்றால் ஊரே திரும்பிப் பார்க்கும் . ஏனென்றால் 100 க்கு 99 பேர் டீ குடித்து வளர்ந்தவர்கள். அப்படி இருந்துவிட்டு எப்போதாவது பெரிய வீட்டு விருந்துகளுக்குப் போனால், பலகாரம் எல்லாம் சாப்பிட்டு விட்டு ப்ரு காப்பி கொடுப்பார்கள். அந்த சுவை எனக்குப் பிடிக்கும். அதுமட்டுமல்ல மதுரை கீழவெளி வீதியில் நரசுஸ் காபி கடை இருக்கும் . அந்த வீதியே காபி மணம் மணக்கும். ஏனென்றால் அந்த மணம் காப்பித்தூளால் மட்டும் வருவதல்ல. அவ்வளவு குறைவான விலையில் காபி மட்டும் கொடுப்பது கஷ்டம். அதில் குறைந்தது 30 சதவிகிதத்திற்கு மேல் சிக்கரி எனப்படும் கிழங்குத் தூள் கலந்திருக்கும்.

சிக்கரி (காசினி) என்பது ஒருவகைச் செடி ஆகும். இதன் தாவரப் பெயர் சிகோரியம் இண்டிபஸ். சிக்கரி செடியின் வேர் முள்ளங்கி போன்றிருக்கும். இந்தச் செடியின் வேரைக் காயவைத்து, வறுத்துப் பொடியாக்குவதன் மூலம் பெறுவது சிக்கரித் தூள். காப்பி சுவையாக இருக்க, காப்பிக் கொட்டைத் தூளுடன், சிக்கரித் தூளை 80க்கு 20 என்ற விகிதத்தில் கலந்து தயாரிக்கப்படுகிறது. (ஆனால் இந்த அளவுகள் brandக்கு ஏற்ப மாறும்) இந்தியாவில் சிக்கரி செடி பஞ்சாப் மற்றும் ஆந்திரபிரதேசம், பீகார், இமாச்சலப் பிரதேசம், அசாம், மகாராஷ்டிரம், குஜராத், தமிழ்நாடு மற்றும் ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களில் பயிரிடப்படுகிறது.

சுவையில் BRU காப்பி சிறந்தது என்றாலும் விலை பலமடங்கு அதிகம் அதனால் பல வீடுகளில் நரசுஸ் காபி தான் இருக்கும். அந்தக் காலத்தில் எங்காவது Bru காபி கிடைத்தால் அதற்கு ஒரே சண்டையாக இருக்கும். எழுத்தாளர் ஜெயமோகன் தனது தளத்தில் இந்த சிக்கரி காபி எப்படி இந்தியாவிற்கு வந்தது பற்றி எழுதியிருக்கிறார். முதல் உலகப்போரின்போது பிரேசிலில் இருந்து காப்பி வரவேண்டியிருந்தமையால் பிரிட்டிஷ் அரசு முப்பது சதவீதம் சிக்கரியை காபியில் சேர்த்தாகவேண்டும் என ஆணையிட்டது. அதனால் காப்பியுடன் சிக்கரி கலப்பது மிகச் சாதாரணம். ஆனால் இந்த அளவு ஒவ்வொரு நிறுவனத் தரப்பைப் பொறுத்து மாறும்.

இப்பொழுது தமிழ்நாட்டின் அனைத்து நெடுஞ்சாலைகள் தோறும் நாம் தவறாமல் பார்ப்பது “கும்பகோண டிகிரி காபி” அது என்ன டிகிரி காபி? ஜெயமோகன் என்ன சொல்கிறாரென்றால், பிரிட்டிஷ் அரசாங்கம் காபியுடன் சிக்கரி கலக்க வேண்டும் என ஆணையிட்டது. அதாவது decree. இந்த ஆணையின் படி தயாரிக்கப்பட்டதால் கும்பகோணம் டிகிரி காபி என்ற பெயர் வந்தது என்கிறார்.

தி ஹிந்து பத்திரிக்கையில் வந்த செய்தியின்படி கும்பகோணத்தில் 110 ஆண்டுகளாக இயங்கும் ஸ்ரீ மங்களாம்பிகா விலாஸ் காபி ஹோட்டல் தான் இந்த கும்பகோண டிகிரி காபியை முதன்முதலில் தயாரித்து இந்த சுவையை நிலை நாட்டியவர்கள் .இவர்கள் சொல்வதின்படி பிரிட்டிஷ் காலத்தில் நல்ல பாலின் தரத்தை நிர்ணயிக்க லக்டோமீட்டர் (lactometer) அளவுகோலில் ஆ எனப்படும் குறியீட்டை பயன்படுத்தியிருக்கின்றனர். இந்த டிகிரி தர பாலில் தயார் செய்த காபி என்பதால் டிகிரி காபி என்று பெயர் வந்ததாக சொல்கின்றனர்.

(07ஆம் பக்கம் பார்க்க)


## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175



# எதிர்ப்பக்கம்

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் நன்றாகக் கவனித்தீர்கள் என்றால் இந்த டிகிரி காபியை அந்த பித்தளை வட்டாவில் குடித்தால் அதன் சுவையே அலாதிதான். அந்த காபித் தூளை எடுத்து வந்து இந்த ஊர்ப் பாலில் கலந்தால் அந்த சுவை வருவதில்லை.

இங்கே எங்கு நோக்கினும் காபி தான். பலதரப்பட்ட காபிக்கள் காபூசினோ , மொக்கா, லாட்டே, எஸ்பிரெஸ்ஸோ மற்றும் நான் கேட்டேயிராத பல காபி வகைகள். இந்த எந்த காபியும் எனக்குப் பிடிக்காது. இங்கே நம்மவர்கள் இங்குள்ள வர்களோடு சேர்ந்து ஐக்கியமாகி காபி குடிக்கச்செல்லும்போது நான் மட்டும் தேமே என்று அமர்ந்திருப்பேன். இந்த நெஞ்சு கரிக்கும் காபி நமக்கு ஒத்துவராது.

சுவை என்பது நாக்கு சம்பந்தப்பட்டது மட்டுமல்ல. மனசும் சேர்ந்தது, மனசெல்லாம் சிக்கரியில் சிக்கிக்கொண்டு இருக்கும்போது இந்த அந்நிய காபி நாவில் மட்டுமல்ல மன திலும் ஒட்டுவதில்லை.

## நிறுத்தற்குறி அறியாதவர்

நான் பெரிதும் ஆவலாக எதிர்பார்த்த இலக்கியத்திற்கான நோபல் பரிசு விருது பற்றிய அறிவிப்பு கடந்த ஒக்ரோபர் மாதம் வெளியாகியது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்டவர்கள் Can Xue, László Krasznahorkai, Haruki Murakami, Margaret Atwood மற்றும் சல்மான் ருஷ்டி. இந்த ஐவரில் பெரும்பாலான புக்கிகள் கேன் ஸூ அல்லது லாஸ்லோ க்ராஸ்னஹோர்கய் (László Krasznahorkai ) அதிக வாய்ப்புகள் இருக்குமென்று கணித்தன. அவர்களது கணிப்பின்படி László Krasznahorkai -க்கு இந்த வருட இலக்கியத்திற்கான நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. பிரபல இலக்கிய விமர்சகர் சரவணன் மாணிக்கவாசகம் கூட Xue அல்லது Margaret Atwood -ற்கே கிடைக்கும் என்று கணித்திருந்தார். வழக்கம்போல நாம் யாரும் எதிர்பார்த்தேயிராத நபருக்கு இந்த வருட விருது.

ஹங்கேரி நாட்டில் பிறந்த 71 வயதான லாஸ்லோ க்ராஸ்ன ஹோர்கை, பிறழ் உலகம் மற்றும் மனச்சோர்வு சார்ந்த நாவல்களுக்காக அறியப்படுகிறார், ஹங்கேரிய மொழியில் எழுதிய இவரது படைப்புகளின் ஆங்கில மொழியாக்கங்கள் 2019 ஆம் ஆண்டு National Book award மற்றும் 2015 International Booker prize உட்பட ஏராளமான பரிசுகளை வென்றுள்ளன. அவரது பல படைப்புகள் குறிப்பாக அவரது முதல் நாவலான Satantango மற்றும் மனத்தைக் குலைக்கும் எதிர்ப்பு (The Melancholy of Resistance) உட்பட திரைப்படங்களாக வெளிவந்துள்ளன.

அவரது நாவல்கள் எதையும் படித்ததில்லை. ஏன் அவர் பெயரையே இப்பொழுதுதான் கேள்விப்படுகிறேன். இந்த விருது அறிவிப்பிற்குப்பிறகு அவரது உரையாடல்கள், அவரது புத்தகங்களைப் பற்றிய விமர்சனங்கள் படித்தேன். சொல்லின் செல்வர் என்றே சொல்வேன். குறிப்பாக அவரது சில உரையாடல்களின் தமிழ் மொழி (Kop?) பெயர்ப்பை கீழே தந்துள்ளேன்.அற்புதம். ஆங்கிலத்தில் நீங்கள் படிக்கவேண்டும். அருமை. அலுப்பூட்டும் ஒரு வரி கூட சொல்லாதவர்.

**கேள்வி : உங்கள் படைப்புகளை பற்றி அறிமுகமில்லாத ஒருவருக்கு எப்படி விவரிப்பீர்கள்?**

பதில் : எழுத்துகள் பின்னர் எழுத்துகளிலிருந்து, வார்த்தைகள் பின்னர் இந்த வார்த்தைகளிலிருந்து, சில குறுகிய வாக்கியங்கள் பின்னர் நீண்ட வாக்கியங்கள், மற்றும் முக்கியமாக மிக நீண்ட சொற்றொடர்கள் , 35 ஆண்டுகளாக தொடர்கிறேன். மொழி தான் அழகு. வேடிக்கைவிளையாட்டுகள் எல்லாம் நரகத்தில்.

**கேள்வி :எதிர்காலத்திற்கும் நமக்கும் என்ன தொடர்பு? நாம் இறுதிக் காலத்தில் வாழ்கிறோமா ? அல்லது நாம் ஏதோ ஒரு வகையான பேரழிவு நிகழ்வுக்குப் பிறகு வாழ்கிறோமா?**

பதில் : பேரழிவு என்பது ஒரு தன்னிச்சையான நிகழ்வு அல்ல. பேரழிவு என்பது மிக நீண்ட காலமாக நடந்து வரும் செயலாகும். நல்ல எதிர்காலம் வரும் என்றும் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள மட்டுமே முடியும் நம்பிக்கை என்பது எப்போதும் எதிர்காலத்தைச் சேர்ந்தது. எதிர்காலம் ஒருபோதும் வராது. இப்போது இருப்பது மட்டுமே நிலையானது. கடந்த காலத்தைப் பற்றி நமக்கு எதுவும் முழுமையாகத் தெரியாது, ஏனென்றால் நாம் கடந்த காலம் என்று நினைப்பதெல்லாம் கடந்த காலத்தைப் பற்றி நமக்குச் சொல்லப்பட்ட கதைகள் மட்டுமே. உண்மையில் சொல்லப்போனால் நிகழ்காலம் கூட ஒருவகையில் கதைதான். நிகழ்காலம் என்பது கடந்த காலத்தின் கதையையும், ஒருபோதும் வராத எதிர்காலத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால் நிகழ்காலமாக இருப்பது மட்டுமே குறைந்தபட்சம் நம்மிடம் நிலைத்திருக்கிறது. நரகமும் சொர்க்கமும் என்பவையெல்லாம் இந்த பூமியில் தான் உள்ளன .ஆதலால் நாம் அவைகளுக்காக காத்திருக்க வேண்டியதில்லை. ஆனாலும், நம்பிக்கையின் துணையுடனே நம்மை நாமே ஆறுதல்படுத்திக் கொள்ளவேண்டும்.

தேவதை எங்களுக்கு மேலே கடந்து சென்றார் (An Angel Passed Above Us ) என்ற ஒரே ஒரு சிறுகதை இணையத்தில் படிக்க கிடைத்தது. அற்புதமான சிறுகதை. ஒரு பதுங்குகுழியில் உயிருக்கு போராடும் இரண்டு மனிதர்களைப் பற்றியது, அவர்களில் ஒருவர் உலகமயமாக்கலின் அதிசயங்களைப் பற்றிய விசித்திர பிம்பத்தை இன்னொருவருக்குச் சொல்கிறார். அந்த விசித்திரமான உலகிற்கும் ,இறக்கப் போகும் இரண்டு மனிதர்களின் யதார்த்தத்திற்கும் இடையிலான வேறுபாடு மிகவும் அப்பட்டமானது. ஒரு காயமடைந்த மனிதன், ஏறக்குறைய மரணமடைந்த மற்றொருவனை பதுங்குகுழியில் உயிருடன் வைத்திருக்க முயற்சிக்கிறார், நம்பிக்கையைப் பற்றி அவரிடம் பேசுகிறார் .அதாவது தான் கண்ட டிஜிட்டல் உலகில் பல அற்புதங்கள் இருக்கின்றன. என் தோழர்கள் என்னைக் காக்க வருவார்கள் என்கிறான் (சாத்தியமற்றது என்பதை அவர் அறிந்திருந்தாலும்) இவர்களின் இந்த உரை யாடலில் எந்தவிதமான ஆன்மீக அல்லது யதார்த்த ரீதி யான கோட்பாடுகளுமில்லை. ஒரு பைசாவிற்கு பிரயோஜன மில்லாத நம்பிக்கையை கொடுப்பதின் மூலம், மிகவும் கடுமையாக காயமடைந்த உயிருக்குப் போராடும் மனிதனை உயிருடன் வைத்திருப்பது மட்டுமே குறிக்கோள். மிக நல்ல சிறுகதை. படியுங்கள்

இவரின் கதைகள் அனைத்தும் மிக நீண்ட வாக்கியங்களால் ஆனவை. நிறுத்தற்குறிகள் இவருக்குப் பிடிக்காது. ஏனென்றால் ஒரு பேட்டியில் இப்படி சொல்கிறார், "நாம் அனைவரும் பேசும்போதும் நிறுத்தற்குறிகளை உபயோகிப்பதில்லை. பேசுகை யில் சிறிய இடைவெளி விட்டு மறுபடியும் தொடங்குகிறோம் இல்லையா. அதுபோன்றே என் கதைகளும்" என்கிறார்.

ஒவ்வொரு முறை இவ்வாறான சர்வதேச விருதுகள் அறிவிப்பு வெளியாகும்போது ,தமிழில் இதற்குத் தகுதிவாய்ந்த என் மனம்கவர்ந்த அசோகமித்திரன் நினைவு வருவதை தடுக்கமுடியவில்லை. அனைத்து சர்வதேச விருதுகளுக்கும் தகுதியானவர். ஆனால் அவர் துரதிர்ஷ்டம் நம் மண்ணில் பிறந்தது. நம்மவர்களே அவரைப் படித்ததில்லை.பிறகெப்படி வெளிநாட்டினர் வணக்கஞ் செய்வர்.

"இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்."

## பேரன்பும் ,பெருங்கருணையும் கொண்டவன்

செயற்கை நுண்ணறிவின்(செ.நு) ஒருபகுதியான உருவாக்க செ.நு ( Generative AI )-வின் செயல்திறன் என்பது நீங்கள் எந்த மாதிரியை ( Model - openAI, claude, llama போன்றவை) பயன்படுத்துகிறீர்கள் அத்தோடு அந்த மாதிரியானது எந்த தகவல்களின் அடிப்படையில் உருவானது என்பதையும் சார்ந்தது. அதாவது இந்த மாதிரியை உருவாக்கும்போது அவர்கள் எந்த மாதிரியான தகவல்களை உள்ளீடு செய்து (பயிற்சியளித்தல் - Training ) உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை பொறுத்தே இவை எவ்வாறு திறன்மிகுந்த செயல்பாட்டை வழங்குகின்றன என்பதமையும். ஒருவேளை இந்த நிறுவனங்கள் மாதிரியை உருவாக்கும்போது ஒரு தலைப்பட்சமாக தகவல்கள், தவறான செய்திகள், ஆபாசம் , நிறவெறி கொண்ட தகவல்களைக் கொண்டு பயிற்சியளித்திருந்தால் , இந்த மாதிரிகள் தவறான தகவல்களையே உங்களுக்கு அளிக்கும். Garbage In Garbage Out .அதே போன்று இந்த செயலிகள் ஒருபோதும் தீர்க்கமான வரையறுக்கப்பட்ட முடியாதவை. (non-deterministic). ஒரு முறை அளித்த வெளியீட்டினை அடுத்த முறை அதே போன்று அளிக்க இயலாதவையாகும்.

மனித மூளை கூட ஒருவகையில் இப்படித்தான். நீங்கள் ஒரு முறை ஒரு விளைவிற்கு எதிர்வினை ஆற்றுவது என்பது உங்கள் மூளைக்குள்ளே உள்ள சிக்கலான நியூரோன்களில் என்ன மாதிரி தகவல் கன்னிகள் பிணைந்துள்ளன மற்றும் உங்கள் கடந்த காலத்தில் என்னவெல்லாம் தகவல்களை கொண்டு உங்களை நீங்கள் பயிற்சி செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை பொறுத்ததே. ஆனால் ஒவ்வொரு முறையும் அதே எதிர்வினையாற்ற உங்களால் முடியாது. நாம் மனிதர்களை கெட்டவர்கள் என்று ஒரு சிலரை வகைப்படுத்தி இருப்பது அவர்கள் மூளைக்குள்ளே உள்ள சிக்கலான வலைப்பின்னலின் விளைவால் அவர்கள் ஆற்றிய செயல்களை ஒட்டியேயாகும்.

சிலியன் மர்பி நடித்த ஸ்டீவ் எனும் திரைப்படம் இந்த மாதிரியான சிக்கலான இளைஞர்களைப் பற்றியது. அவர்கள் படிக்கும் விடுதிப் பள்ளி , அவர்கள் பிரச்சினைகள், அவர்களால் எவ்வாறு ஒவ்வொரு சாதாரண செயலுக்கு எவ்வாறு சிக்கலாக எதிர்வினையாற்றுகிறார்கள் என்பதைப் பற்றி மிக அற்புதமாக படமெடுத்துள்ளனர்.

அந்த விடுதியில் தங்கி படிக்கும் ஒவ்வொரு இளைஞனுக்கும் பின்னே ஒரு துயரக்கதை இருக்கிறது. ஏதோ ஒரு கட்டத்தில் அவர்களது வாழ்வில் நடந்த சிக்கல் அவர்களை மிகுந்த குழப்பமானவர்களாக்குகிறது. மற்ற மனிதர்களைப் போல சமூகம் இயற்றிய நியதிகள் அவர்கள் மூளையில் பதிவதில்லை. அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் உடனே எதிர்வினையாற்றுதல் (வன்முறை , காயப்படுத்துதல், உரக்கப் பேசி சண்டையிடுதல்). ஆனால் தாங்கள் செய்யும் காரியங்கள் தவறு என்பதை உணரும் போது எளிதில் உடைந்துவிடுபவர்களாகவே இருக்கின்றனர்.

ஸ்டீவ் எனும் தலைமையாசிரியர் வேடத்தில் சிலியன் மர்பி நடித்திருக்கிறார்.மிக அற்புதமான நடிப்பு . அவரது முகமும், கண்களும் நமக்கு காட்சியின் தீவிரத்தை உணர்த்துகின்றன. ஸ்டீவ் பேரன்பும் ,பெருங்கருணையும் கொண்டவன் . தனது பள்ளியில் படிக்கும் இந்த சிக்கலான மாணவர்களை மிகக் கவனமாகக் கையாளுகிறார். ஒரு சொல் கூட கனிவின் ஈரமின்றி அவர் தன் மாணவர்களிடம் பேசுவதில்லை. அவரது கண்களுக்கு இந்த குழந்தைகள் சிக்கலானவர்கள், அவர்களுக்கு கூடுதல் கவனம் தேவை என்பதே இருக்கிறது. எல்லோரையும் போன்று அவருக்கும் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதை எல்லாம் தாண்டி கருணையும் ,பேரன்பும் பெருவெள்ளமென பாய்கிறது.

அற்புதமான படம். நெட்பிளிக்ஸில் கிடைக்கிறது. கண்டிப்பாகப் பாருங்கள்.


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices
& Things
Where quality meets
community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com

# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

கார்த்திகை 2025 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162


## மாவீரர் வார சிறப்பிதழ்






# மாவீரர் நாளும் சில கேள்விகளும்

ஈழப்போராட்டம் எதிர்பார்த்த விடுதலையையும் அரசியல் முன்னேற்றத்தையும் தராமல் முடிந்துவிட்டது. இது பெருந்துயரமே. ஆனால், அது உண்டாக்கிய நினைவலைகள் ஓயவில்லை. எந்தப் போராட்டத்திலும் இத்தகைய நிலையிருக்கும். அதில் ஒன்று, போராட்டத்தில் தங்கள் இன்னுயிரை ஈகம் செய்த வீரர்களின் நினைவாகும். அதைத் தமிழ் மக்கள் மாவீரர்நாளாக ஒவ்வாரு ஆண்டும் நவம்பர் 27 இல் நினைவு கூருகிறார்கள்.

இது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாக்கிய மரபாகும். இந்த மரபு இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் நடைமுறையில் இல்லாத போதும், உலகெங்கும் உள்ள தமிழ் மக்களால் தொடரப்படுகிறது. இது வியப்புக்குரிய ஒன்று. ஏனென்றால், குறித்த இயக்கம் இல்லாத போதும் அந்த இயக்கத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு நடைமுறையை மக்கள் பின்பற்றுகிறார்கள் - தொடருகிறார்கள். இதற்குக் காரணங்கள் சில உண்டு.

1. தங்களுடைய விடுதலைக்காகப் போராடி மரணத்தைத் தழுவிய போராளிகள் பற்றிய உணர்வும் அவர்களிடம் மக்களிடம் நீங்காமல் உள்ளது. இதனால் அவர்களை எப்படியும் நினைவுகொள்ள வேண்டும் என்ற உணர்வு மக்களில் பெரும்பாலானவர்களிடம் உண்டு. மாவீரர் நிகழ்வுகளின் அடிப்படைகளில் ஒன்று இதுவாகும்.

2. இன்னொரு தரப்பினருக்கு ஒரு வகையில் இதுவொரு குற்றவுணர்ச்சியும் கூட. வாழும் வயதில், தங்களுடைய இளமையை போராட்டத்துக்கென அர்ப்பணித்துச் செயற்பட்டு, இறுதியில் மரணத்தையும் தழுவிக்கொண்ட போராளிகளை நினைக்கும்போது, தங்களுக்காகப் போராடியவர்கள் சாவடைந்து விட்டனர். ஆனால், நாமோ எல்லாவற்றைக் கடந்தும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற குற்றவுணர்ச்சி இவர்களைக் குடைந்து கொண்டேயிருக்கிறது. இதை நீக்குவதற்கு இத்தகைய நினைவுகூருதல்களைச் செய்து தங்களை ஆற்றுப்படுத்திக் கொள்கிறார்கள். அதனால், குறைந்த பட்சம் இந்த நிகழ்விலேனும் பங்குபற்ற வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

3. போராடி மரணத்தைத் தழுவிக்கொண்டோரின் பெற்றோர், உறவினர், நண்பர்கள், சக தோழ தோழியரால் நினைவுகொள்ளப்படுதல். இது கூடி வாழ்ந்தவர்களை அஞ்சலித்தல் என்பதாகும். இவர்கள் நேர்மையான முறையில் அஞ்சலி செலுத்துகின்றனர்.

4. அரசியற் காரணங்களுக்காக அல்லது தங்களுடைய அரசியல் நலனுக்காக மாவீரர் என்ற பெயரைப் பயன்படுத்திக் கொள்வதும் மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்துவதும் அதில் பங்கேற்பதுமாக நடப்பது. அதாவது, இவர்களால் மக்களுக்கெனத் தியாகம் எதையும் செய்ய முடியாது. தம்மை அர்ப்பணித்து தேசத்துக்கான பணிகளைச் செய்வதற்கும் இயலாது. மற்றவர்களின் தியாகங்களைக் கூறி, பிழைக்க மட்டுமே முடியும். அடிப்படையில் இது ஒரு பிழைப்புவாத அரசியலாகும்.

5. இந்த மரணங்களின் பெறுமதி எத்தகையது? இப்படி நினைவு கொள்வதன் அடிப்படைகள் என்ன? இவ்வாறு நினைவு கொள்வதன் மூலமாக நாம் எடுத்துக் கொள்ளும் அரசியல் தொடர்ச்சியும் வளர்ச்சியும் எவ்வாறானது? நினைவு கொள்ளப்படும் (நினைவு கூரப்படும்) மறைந்த வீரர்களுடைய கனவுகளை எப்படி நிஜமாக்குவது- நிறைவேற்றுவது? உண்மையான நினைவுகூருதல் என்பது என்ன? அது எவ்வாறு அமைய வேண்டும்? என்பதைப் பற்றிய கேள்விகளோ சிந்தனையோ எதுவுமே இல்லாமல், ஏதோ நடக்கிறது. அதில் நாமும் சேர்ந்து நிற்போம் என்ற மாதிரிக் கலந்துகொள்வது.

இதுபோல பல காரணங்கள் உண்டு.

இவ்வாறான காரணங்களால்தான் வெவ்வேறு அணிகளால் அல்லது பல அணிகளால் மாவீரர்நாள் கொண்டாடப்படுகிறது - அனுஷ்டிக்கப்படுகிறது. அவரவர் தத்தமது தேவைகளுக்காக மாவீரர் நாளைக் கொண்டாடுகின்ற - அனுஷ்டிக்கின்ற - ஒரு நிலை உருவாகியுள்ளது. அதாவது இது உருவாகிய தேவையும் சூழலும் வேறு. இன்று பின்பற்றப்படும் தேவையும் சூழலும் வேறு.

ஈழப்போராட்டத்தில் உயிர் நீத்தவர்களை மதித்துப் போற்ற வேண்டும் என்றால், அவர்களுடைய கனவுகளுக்கும் நடைமுறைகளுக்கும் நேர்மையாக - விசுவாசமாக இருக்க வேண்டும். இதனுடைய அர்த்தம், அவர்கள் கொண்டிருந்த அதே அரசியலை இன்றும் மேற்கொள்வது என்பதல்ல. அது நடைமுறைச் சாத்தியமும் இல்லை. அந்த அரசியல் நிலைப்பாடு இன்றைய காலத்துக்குப் பொருத்தமானதும் அல்ல. ஆனால், தாம் தேர்வுசெய்கின்ற அல்லது பிரகடனப்படுத்துகின்ற அரசியலுக்காக - அதை நடைமுறைப்படுத்துவதற்காகத் தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் பண்பாடும் உள நிலையும் துணிச்சலும் இருக்க வேண்டும். அதுவே நேர்மையானது. அதுவே நாம், தம்மை அர்ப்பணித்த போராளிகளுக்குச் செய்கின்ற நேர்மையான மதிப்பார்ந்த அஞ்சலியாகும். அவ்வாறில்லை என்றால், அவர்களுடைய பெயரை வைத்துப் பிழைக்கும் பிழைப்புவாத அரசியலைச் செய்வதாகவே அமையும்.

இதேவேளை, அனைத்து இயக்கப்போராளிகளுக்கும் என ஒரு பொது நாளினைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் நாம் இந்த இடத்தில் இணைத்துப் பார்ப்பது பொருத்தமாகும். ஏனென்றால், ஈழ விடுதலைக்காகப் போராடி, மரணத்தைத் தழுவியவர்கள் அனைவரும் மதிப்புக்குரியவர்களே. அப்படியாயின் அவர்கள் அனைவரையும் உள்ளடக்கி, ஒரே நாளில் நினைவு கொள்ளலாம். அது விடுதலைப் புலிகளின் மாவீரர் நாளான நவம்பர் 27 ஆகவும் இருக்கலாம். அல்லது பிறிதொரு நாளாகவும் இருக்கலாம். அப்படி ஒரு பொதுநாள் ஏற்றுக்கொள்ளப்படுமாக இருந்தால், அது அரசியல் ரீதியாகவும் நினைவுகூரலின் அடிப்படையிலும் சிறியதொரு முன்னேற்றத்தைத் தரக் கூடும்.

இதற்கும் அப்பால் இந்த நினைவுகூரல் இப்பொழுது - அதாவது எந்த இயக்கமும் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் இல்லாத சூழலில் - நடப்பதற்கான காரணத்தை நாம் அர்த்தமாக்குவதாக இருந்தால், அதைக் குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்திக்கும்போதுதான் இந்தச் சடங்குத்தனமான, சம்பிரதாயமான நினைவுகூரல் என்ற அர்த்தக் குறைவான நடைமுறை மாறி, புதிய போக்கொன்று அர்த்தபூர்வமாக விளையும்.

1989 இல் மாவீரர் நாளை விடுதலைப் புலிகள் இயக்கம் மரணித்த போராளிகளை நினைவுகூரும் விதமாக அனுஷ்டிக்கத் தொடங்கியது. அதற்காக அது தன்னுடைய அமைப்பிலிருந்து முதல் சாவடைந்த போராளியான சத்தியநாதன் என்ற சங்கர் மரணித்த நவம்பர் 27 ஆம் நாளையும் அந்த நேரத்தையும் தேர்வு செய்தது. அதுவே இப்பொழுது மாவீரர் நாளாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

விடுதலைப் புலிகளின் வளர்ச்சியும் அது தேர்ந்தெடுத்த ஆயுதப்போராட்ட வடிவமும் நேரடியாகவே ஒரு யுத்தத்தை விரித்தது. அப்படி விரிவடைந்த யுத்தம், பல நூற்றுக் கணக்கில் ஏன் சில சந்தர்ப்பங்களில் ஆயிரக்கணக்கிலான போராளிகளின் உயிரைக் கோரியது. இப்படி பல நூறுபேர் யுத்த களத்தில் மடியும்போது, அது மக்களிடையே ஒரு பெரும் கலக்கத்தையும் கேள்வியையும் எழுப்பக் கூடும். ஏனெனில் ஈழத்தமிழர்கள் ஒரு சிறிய இனம் மட்டுமல்ல, சிறிய பிரதேசத்திற்குள்ளேயே வாழ்கின்றவர்கள் என்பதால் அதிகரித்த மரணங்களை போராட்டத்தில் சந்திக்கும்போது, அது மக்களின் உளநிலையில் தயக்கத்தையும் குழப்பங்களையும் உண்டாக்கும். இப்படியே இந்த யுத்தம் சென்று கொண்டிருந்தால், கூடிச் செல்லும் மரணங்களைக் குறித்த கேள்விகளும் தயக்கமும் குழப்பமும் எழுந்து போராட்டத்துக்கு எதிரான மக்கள் அலையாக மாறக் கூடும் என்று சிந்திக்கப்பட்டதன் விளைவே, மாவீரர்நாளாகும்.

களத்தில் மடிந்த போராளிகளை மகத்தான வீரர்களாக, வரலாற்று நாயகர்களாக, விடுதலையின் வித்துகளாக, மண்ணின் முத்துகளாக சித்திரிப்பதன் மூலம் உங்களுடைய பிள்ளையோ கணவரோ, சகோதரரோ வெறுமனே சாவைத் தழுவிக் கொள்ளவில்லை. அவர்களுடைய சாவுக்கொரு மகத்துவமும் பெறுமதியும் உண்டு. அதற்கொரு வரலாற்று முக்கியத்துவம் உள்ளது என்ற உணர்வு நிலையைக் கட்டமைப்பது.

இதன்மூலம் சாவடையும் போராளிகளுடைய உறவுகளுக்கும் தோழர்களுக்கும் ஒருவிதமாக ஆறுதலையும் அவர்கள் திருப்திப்பட்டுக் கொள்ளும் அளவுக்கு நிறைவையும் கொடுப்பதாக உணர வைப்பதாகும். அதாவது இந்தச் சாவுகளுக்கு அர்த்தமும் பெறுமதியும் உண்டெனை நம்ப வைப்பது.

இத்தகையதொரு வரலாற்றுக் காரணம், போராடும் அல்லது போர் செய்யும் தரப்புக்கு அவசியம் தேவை. இதையே இன்னொரு பரிமாணத்தில் - கோணத்தில் அரசும் செய்தது. அது படைகளின் உளநிலையையும் அவர்களுடைய உறவுகளின் உளத்தை ஆற்றுப்படுத்தவுமாக.

ஆனால், இன்று சூழல் முற்றாகவே மாறி உள்ளது. இது போர் முடிந்து 15 ஆண்டுகளுக்கும் மேலாகிய சூழல். விடுதலையைப் பெற்றுத்தரும், போராட்டத்தில் வெற்றி கிட்டும் என்ற எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் இல்லாதொழிந்த காலம். இப்பொழுது புதிய அரசியல் முன்னெடுப்புகளும் அதற்கான வழிமுறைகளும் கண்டறியப்பட வேண்டிய நிலை. இந்தச் சூழலில், கடந்த காலத்தின் அரசியல் அடையாளங்களையும் நடைமுறைகளையும் பின்பற்றும்போது, அதை எத்தகைய அடிப்படையில் பின்பற்றுவது? அதனுடைய பெறுமதி என்ன? அதற்கான இன்றைய தேவை என்ன? உணர்வைத் திருப்திப்படுத்தத்தான் நம்முடைய அரசியல் பயன்படுத்தப்படுகிறதா? அல்லது மரணித்த வீரர்களின் கனவுக்கு நேர்மையாகவும் விசுவாசமாகவும் செயற்பட்டு, விடுதலையை நோக்கிய அரசியலை முன்னகர்த்துவதா? என்ற கேள்விகள் எழுகின்றன.

இப்பொழுது மாவீரர் நிகழ்வுகளை நடத்தும்போது அல்லது போராட்டத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும்போது நாம் மனதிற் கொள்ள வேண்டியது. எதிர்கால அரசியலைக் குறித்த சிந்தனைகளைச் செயல் வடிவமாக்குவது எப்படி என்பதாகவே இருக்க வேண்டும். அதையே ஒவ்வொரு போராளியும் மரணித்த ஒவ்வொரு வீரரும் தங்களுடைய கனவாக, விருப்பாகக் கொண்டிருந்தனர்.

அப்படியாயின் இதனை எவ்விதம் முன்னெடுப்பது? யார் முன்னெடுப்பது? என்ற கேள்விகள் மேலும் எழுகின்றன. ஏனென்றால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு தரப்பும் தாம் சொல்வதே சரி. அதுவே நிஜம் என்றே வாதிடுகின்றன. இந்தச் சூழலில் எத்தகைய நிலைப்பாட்டை, எத்தகைய கருத்துநிலையை ஏற்றுக் கொள்வது? அல்லது எந்தத் தரப்பை அங்கீகரிப்பது என்ற குழப்பம் மக்களுக்கு உண்டு.

முதலில் நடைமுறை ரீதியாகச் சாத்தியப்படக் கூடிய அரசியலை முன்னெடுப்பவர்களையே மக்கள் ஆதரிக்க வேண்டும். அவர்களே வெற்றியின் நாயகர்கள். அவர்களே பொறுப்பான முறையில் சிந்திக்கிறார்கள். அவர்களுக்கே மக்களுடைய வலியும் சுமையும் புரிகிறது. அவற்றைக் குறித்து அவர்களே ஆழமாக உணர்கிறார்கள். என்பதால் அவர்களே மரணித்த வீரர்களின் கனவுக்கு விசுவாசமாக உள்ளனர். ஒப்பீட்டளவில் அவர்களே இதற்கு நேர்மையாளர்கள். அவர்களின் வழியில் திரள்வதும் அந்தப் போக்கைப் பலப்படுத்துவதும் அவசியமாகும். அதுவே மாவீரர்களுக்கு அல்லது போராட்டத்தில் மரணித்த தோழர்களுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும். அதேவேளை மாவீரர்களைப் போற்றுகிறோம் என்று சொல்லிக் கொண்டு, அந்த வீரர்களின் கனவுக்கும் உணர்வுக்கும் மாறாக உள்ளோர் வியாபாரிகள், வரலாற்று மூடர்கள். சமூக - மக்கள் விரோதிகள். இதை - இவர்களை எதிர்ப்பதும் மாவீரர்களுக்கு செய்கின்ற அஞ்சலி. அவர்களுக்குச் செலுத்துகின்ற மதிப்பு ஆகும்.

வரலாறு ஒரு மாறுதலுக்கான காலகட்டத்தில் நின்று இந்தக் கேள்விகளை - இந்தச் சிந்தனையை எழுப்புகிறது. நாம் என்ன செய்யப்போகிறோம்? என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை.

ஆகவே விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லாத சூழலில் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த மாவீரர் நாள், இன்றைய சூழலில் எத்தகைய பெறுமானத்துக்குரியது? அதனுடைய எதிர்கால விளைச்சல் என்னவாக இருக்க வேண்டும்? ஒரு காலகட்டத்து விடுதலைப் போராளிகள் என்று கருதப்பட்டோரின் கனவுகளுக்கு இன்று எத்தகைய மதிப்பு வழங்கப்படுகிறது? இதை நாம் எப்படிச் சீராக்கி முன்னெடுப்பது? என்பதே இந்த மாவீரர் நாள் சிந்தனைகளாகவும் நடைமுறைகளுக்கான கேள்விகளாகவும் இருக்கட்டும்.

கண்களை மூடி, தலைகளைத் தாழ்த்தி, நிலம் நோக்கிச் செலுத்தும் அஞ்சலி எங்கள் இதயத்தை நாம் ஒரு கணம் ஆழமாகப் பார்ப்பதாக இருக்க வேண்டும். விழிகளைத் திறந்து வெளியே பார்த்து, வான்நோக்கி நிமிர்வது நாம் அஞ்சலிப்போரின் கனவுகளை நிறைவேற்றுவோம் என்று வான் நோக்கி உறுதி உரைப்பதாக இருக்கட்டும்.



# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

**போரில் உயிரிழந்த தங்களது உறுப்பினர்களை எரிக்கப்போவதில்லை என்றும் புதைக்கப் போவதாகவும் முடிவெடுத்த விடுதலைப்புலிகள் அமைப்பு தொண்ணூறுகளில் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை. வித்துடல்கள் என்ற பதம் பயன்படுத்த தொடங்கிய இந்த வரலாற்று காலகட்டம் தொடர்பான பதிவு இது.**

வீரமரணமடைந்த புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்படமாட்டாது. அவைகள் புதைக்கப்படவேண்டும் என்று நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுள் மிகப்பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலை பெறும்.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்படவேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம் என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

### போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றை படைக்கும் சிருஷ்டி கர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்று சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தியாக சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திர பெருஞ்சுடரை ஏற்ற உதவும் நெருப்பு கிடங்குகளாகவே பயன்படும்.

எனவேதான், போராளிகளது உடல்களைப் புதைத்து, கல்லறைகளை எழுப்பி, அதை என்றென்றும் உயிர்த் துடிப்புள்ள ஒரு நினைவுச்சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

### அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்காலமாக இருந்துவந்த சம்பிரதாய சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றதே என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களது பிள்ளைகளான புலிவீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்தநிலையில் இந்த நாட்டின் பொதுச்சொத்தாக - பொக்கிசமாக - இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும் எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்துகொண்டேயிருக்க வேண்டும்.

இது புறமிருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதை பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ உடன் பிறந்தவர்களோ உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச்சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழ நின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும்கூட அப்போராளியை பெற்றெடுத்து சீராட்டி வளர்த்த தாய் தந்தையரோ அல்லது உடன்பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாதுவிட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக்காட்டப்போகிறோம்?

ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான போராளிகளை தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப்போகிறோம்?

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும் அங்கலாய்ப்பையும் அனுபவ வாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான், தனது பிள்ளையின் உடலைப்பார்க்காதுவிட்டாலும்கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையை பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவிசெய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்கு சென்று அவனது நினைவுகளை மீட்டிப் பார்ப்பதுடன் ஓர் ஆத்மதிருப்தியையும் அவர்கள் அடைந்துகொள்வார்கள்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானதுதான். ஆனால், அந்த சோகத்தை மறைக்கவேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்கமுடியாதுதானே?

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப்பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா என யாராவது வினா எழுப்பலாம்.

நீண்ட காலம்தொட்டு இருந்து வரும் “தகனம் செய்வது” தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழரின் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புற நானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்க போதுமானது.

ஆனாலும், இந்த ஆராய்ச்சிகள் ஒருபுறமிருக்கட்டும். உண்மையில் இந்த முறையை ஒரு சமூகசீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொது மக்களுக்கல்ல. எனவே, இங்கே பண்பாட்டு பிரச்சினை எழ நியாயமில்லை. அத்துடன், புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக்கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

**நன்றி - விடுதலைப்புலிகள்**

# மாவீரர் வழிபாட்டு நடைமுறைகள்

## இதயக்கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்

"எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக – எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாக – அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச்சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச்சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக – கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக – தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் ( தியாகிகள் ) காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

"ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக – விமோசனத்திற்காக – வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ள சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்."





## அலங்காரம் (சோடனை)

வீரச்சாவு, வீரவணக்கக்கூட்டம், துயிலுமில்ல, மாவீரர் விசேடநிகழ்வு, வேறு அனைத்து நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள், சமூக சமய, வேறு அரசியல் சார்ந்ததாக இருக்காமல் சிவப்பு, மஞ்சள் நிறங்களைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

துயிலுமில்ல மைதான நடுவில், பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வு கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். பொதுவான ஒருவர் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர் உரித்துடையோர் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவர். சமகாலத்தில்ஒவ்வொருஇல்லங்களிலும், வாசலிலும்மாவீரரின் சுடர்ஒளியை அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலைவிட்டெரியும். ஒவ்வொருசுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழர் தாயகம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழ் மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழர் தாயகமெங்கும் மாவீரர் சுடர்கள் இந் நேரத்தில் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக்கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீபங்கள் எரியும் போது பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவுகூர வேண்டும்.

இந்த சுடரேற்றும் நிகழ்வானது, விடுதலைப்பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

## தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...



"மாவீரர்
தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரி பாசறையை
வெடிகுண்டு கொண்டு தகர்க்கும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
கொடியது பறந்திட
உயிரினை ஈந்து
உடலை உரமிட்டு
செங்குருதியால்
வரலாறு படைத்து
தமிழர் மண்ணெங்கும்
நினைவுச் சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய
வேதங்களாய்
ஈழமண்ணில் புதுவிதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவர்.

## ஏன் இவர்கள் மாவீரர்கள்?

தமிழ் இனவிடிவுக்காய் மரணித்தவர்கள். தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத் தீயை தமக்குள்ளே சிறைபோட்டவர்கள் தேசமக்களின்பாசப்பிணைப்புகளுக்காகதமது பாசங்களைப்பொசுக்கியவர்கள். பள்ளிப்பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறிகொடுத்தவர்கள்.

ஊரெல்லாம் உறங்கும்வேளை உறக்கமின்றி விழித்தவர்கள் எல்லைசுற்றி வேலிச்சிலையாக நின்றவர்கள் தமது மக்களுக்காக கால்களை, கரங்களை இழந்து நின்றவர்கள்.

## மாவீரர் நாள் நவம்பர் 27

தங்கள் இன்னுயிரை ஈந்து விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும் ஈகங்களும் அரும்செயல்களும் மக்களிடத்தில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும் குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் உருவானதுதான் மாவீரர் நாள்.

விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்துவிட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரர்களையும் தனித்தனியாக அவரவர் நினைவு நாட்களில் நினைவு கூருவதைத் தவிர்த்து விடுதலைப் போரின் முதல் மாவீரரான லெப்டினன்ட் சங்கர் அவர்கள் வீரச்சாவடைந்த நவம்பர் 27 ஆம் நாளை பொதுவான நாளாக தேர்ந்தெடுத்து 1989 ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

## மாவீரர் வாரத்தை எதிர்கொள்ளுதல்

மாவீரர் நாளானது தமிழர் எழுச்சி நாளாகத் தமிழ் மண்ணெங்கும் கொண்டாடப்படுகின்றது. எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் வாரமானது நவம்பர் 21 இல் தொடங்கி நவம்பர் 27இல் முடிவடைகின்றது. இம் மாவீரர் நாட்களை அனுட்டிக்கும் முகமாக நவம்பர் 21 ஆம் நாளுக்கு முன்னதாகவே தமிழர் நிலமெங்கும் புனிதப்பட்டு விடுகிறது. மாவீரர் தூபிகள், நிழற் படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கிவிடுகின்றனர். இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு தாயகம் புதுப் பொலிவுடன் விளங்கும்.

## நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்



**நினைவொலி எழுப்புதல். (6.05 மணி )**

கார்த்திகை 27 அன்று 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் மணி ஒலி ஒரு மணித்துளி நேரம் எழுப்பப்படும். உயிர்காப்பு பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி )**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழ் மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்துதல் வேண்டும்.

**ஈகச் சுடரேற்றுதல் (6.07)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படல் வேண்டும் (மாவீரர்களின் பெற்றோர் அவரவர் சுடர் ஏற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக் கற்களுக்கு முன்னால் 5.15 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.)

மாவீரர் துயிலுமில்லங்களிலுள்ள மாவீரர் கல்லறைகள், நடுகற்கள் முன்மாவீரர்களின்பெற்றோர், குடும்பத்தினர்அவர்களுக்கெனஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லங்களுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்களில், பொது இடங்களில், அலுவலகங்களில், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில் உரிய முறைப்படி ஈகச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும் (மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறு வகையில் ஒலி,ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.

## நிகழ்வு விதிகளில் அலங்காரங்களும் நிறங்களும்

- சிவப்பு, மஞ்சள், நிறங்களைக் கொண்டும் கறுப்பு கரும்புலிகள் தினத்திற்கும் கரும்புலிகள் சம்பந்தமான நிகழ்வுகட்கு மட்டும் கலந்து சோடிக்கலாம்.

- வீரச்சாவு கல் நாட்டலுக்கு சிவப்பு, மஞ்சள் துணிகளைப பாவித்தல் வேண்டும்.

- மேசைவிரிப்பு, பீடவிரிப்புகளும்சிவப்பு, மஞ்சள் துணியாகவே இருத்தல் வேண்டும். வெள்ளைத்துணி பாவிப்பதை தவிர்த்தல் நன்று.

- இச்சோடனைகள் தனித்துவமாக மாவீரர்களின் தற்கொடைத் தியாகம், அமைப்பு இலட்சியங்களை மக்கள் மனங்களில் தோன்றிப் பதிந்து எமது போராட்டத்தின்பால் இணைந்து செயற்பட வழிசமைத்தல் வேண்டும்.

### கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள்
### ஆரம்ப நிகழ்வுகள்

1. பொதுச்சுடர்
2. ஈகச்சுடர்
3. மலர்வணக்கம்
4. அகவணக்கம்

- எமது மாவீரர் நிகழ்வுகள் அமைப்பு நிகழ்வுகள் அனைத்திலும் ஈகச்சுடர் ஏற்றுதல் கட்டாயமாகும். மங்கள விளக்கு ஏற்றக்கூடாது
- அகவணக்கத்துக்கு நேரம் குறிக்கக்கூடாது.

### தவிர்க்கப்பட வேண்டியவை

1. அஞ்சலி, மௌன வணக்கம், மலரஞ்சலி, மங்கள விளக்கு, அஞ்சலியுரை, அஞ்சலிக்கூட்டம், அகவணக்கம் - ஒரு நிமிடம் இரு நிமிடம் எனக்குறித்துக் கூறுதல்.
2. தமிழரின் கலாசார உடை தவிர்ந்த ஏனைய உடையுடன் வருதல் இயன்றளவில் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. கைத்தொலைபேசி பாவனை துயிலுமில்ல வளாகத்திற்குள் முற்றாக தடை செய்யப்பட வேண்டும்.
4. பணிக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தவிர்ந்த எவரேனும் புகைப்படம் எடுத்தல் ஒளிப்பதிவு நடவடிக்கைகளில் இருந்து விலகி இருத்தல் வேண்டும்.
5. மாவீரர்களின் புனிதத்தன்மையைப் பாதிக்கும் வேறு எவ்வகையான செயற்பாடுகளிலிருந்தும் அனைவரும் முற்றாக விலகி இருத்தல் வேண்டும்.

**போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்**

எமது வடக்கு கிழக்கு இணைந்த தாயக பிரதேசத்தில் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழரின் விடிவுக்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

எங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளுக்கும் எமது போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும், புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக என்றும் இருக்கும் மாவீரர்களினது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும் உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழ் மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.

# தேசியத் தலைவரின் 20 வருட மாவீரர் நாள் உரைத் துளிகள்!



“பிரபாகரன் தனிமனிதன் அல்ல. ஓர் இனத்தின் பிரதிநிதி. பிரபாகரன் தமிழீழத்திற்கு துரோகம் செய்தால் பிரபாகரனும் சுட்டுக்கொல்லப்பட வேண்டியவரே”

“இந்தியா ஒரு இயக்கத்தை மட்டும் நம்பியிருக்க கூடாது என்று எண்ணியது. அதனால் எல்லா இயக்கங்களுக்கும் பயிற்சியளித்து தமக்கு ஒத்துப்போகும் இயக்கங்களை பாவித்து ஒத்துவரா இயக்கங்களை அழிக்க எண்ணியது. அங்குதான் இந்தியா தவறிழைத்தது. அதில் எங்களையும் இணைத்துக்கொண்டது”

**- 1989**

“இந்த மண்ணின் மைந்தர்களை பெற்றெடுத்த பெற்றோர்களை நான் போற்றுகிறேன். உங்களுடைய பிள்ளைகள் தமது உயிருக்கும் மேலாக தாய் நாட்டை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை புனித இலட்சியத்திற்காக உகந்தளித்த பெற்றோர்களாகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களுடைய குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமானவர்கள்”

**- 1990**

“நாம் இனத்துவேசிகள் அல்லர். போர்வெறிகொண்ட வன்முறையாளர்களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ விரோதிகளாகவோ பார்க்கவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கிறோம். சிங்கள பண்பாட்டை கௌரவிக்கிறோம்”

**- 1991**

“எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் நிதியையும் அள்ளி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கை நீட்டி நிற்கவில்லை. எவரிடம் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில் சொந்த மக்களில் சொந்த கால்களில் தங்கி நிற்கிறோம்”

**- 1992**

“எமது இயக்கம் சமாதான முயற்சிக்கு தடையாக இருந்ததில்லை. சிங்கள அரசுக்கு எத்தனை சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்பு முதல் கொழும்பு வரை பேச்சுக்கு சென்றோம். ஆனால் தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதனையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியை கைவிட்டு போர்க்களத்தில் தீர்வுகாண விரும்பியது. தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை பயங்கரவாதம் என சித்திரித்துகாட்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லை எனபகிரங்கமாக பிரகடனம் செய்துள்ளது”

**- 1993**

“சமாதான வழியில் தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு முயற்சிகளை எடுக்கும் எனில் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசியப்போரட்டத்தின் இன்றைய வளர்ச்சியை கருத்தில் கொண்டு உருப்படியான சுயாட்சி திட்டங்கள் முன்வைக்கப்படுமாயின் நாம் அதனை பரிசீலனை செய்ய தயாராக இருக்கின்றோம்”

**- 1994**

“யாழ்நகரையும் வலிகாமப் பகுதியையும் ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்னர் ஒட்டுமொத்த மக்களும் சென்ற வரலாற்று நிகழ்வானது அரசின் தந்திர உபாயத்திற்கு சாவு மணி அடித்தது. அரசின் போர் நடவடிக்கையையும் அதற்கு அரசு கற்பிற்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப்பாண தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்து விட்டனர் என்பதையே இந்த இடம் பெயர்வு நிகழ்வு எடுத்துகாட்டுகிறது. ஆக்கிரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல் சுதந்திர மனிதர்களாக சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு எவ்விதத் துயரையும் எதிர்கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கிறார்கள் என்பதையே இந்த இடம் பெயர்வு உலகத்திற்கு பறைசாற்றியுள்ளது”

**- 1995**

“மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும் புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களை சரணடைவு செய்ய வேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கிறார். எந்த ஒரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப் பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை”

**- 1996**

“மாவீரரின் வீர வழிபாட்டு மரபானது தமிழினத்தின் விடுதலைஎழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்துவருவதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத்துவேசப் பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்களப் பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்க முடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது. யாழ்ப்பாணக் குடாநாடு எதிர்ப்படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியாற் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாகத் தமிழர்களால் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களைச்சிதைத்தழித்த இச்செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன்”

**- 1997**

“எமது மக்களை அரவணைத்து - இணைத்து - வாழவும் விரும்பாமல், பிரிந்துசென்று தனித்து வாழவும் விடாமல், எமது மக்களை அடிமைப்படுத்தி ஒழித்துக்கட்டவே சிங்கள அரசுகள் முனைந்தன. எனவேதான், அன்று தொட்டு இன்றுவரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாம் போராடி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டோம். வரலாற்றின் கட்டாயங்களுக்கு ஏற்ப எமது போராட்ட வடிவங்கள் மாறிய போதும் எமது உரிமைகளுக்கான எமது சுதந்திர வாழ்விற்கான போராட்டம் தொடர்கிறது. இப்போராட்டம் வளர்ந்து விரிந்து இன்று இருதேசங்கள் மத்தியிலான போராக பேயுருவம் பெற்றிருக்கிறது”

**- 1998**

“போரியற் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த ‘ஓயாத அலைகள் மூன்று; என்ற வன்னிப் பெரும் சமர் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது”

**- 1999**

“எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப்பு முனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும்” **- 2000**

“விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையிற் ஸ்ரீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற்குலக நாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதானப் பேச்சுக்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழிகோலப்போவதில்லை. மாறாக, சமாதானப் பேச்சுக்குப் புலிகள் மீதான தடைநீங்க வேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, இந்நடவடிக்கைகள் மேலும் வலுச்சேர்க்கும்”

**- 2001**

“தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்றவில்லை. ‘உயர் பாதுகாப்பு வலயங்கள்’ என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன”

**- 2002**

“எமது இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குச் சிங்கள இனவாத சக்திகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. தனித் தமிழ் அரசுக்கு அத்திவாரமாக எமது திட்டம் அமைவதாகச் சிங்கள இனவாதக் கட்சிகளும் ஊடகங்களும் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றன. இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தும் இதே போன்று கண்டன விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன”

**- 2003**

“சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை”

**-2004**

“சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்”

**-2005**

“சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு நீதியின் வழிநடக்கும் உலகநாடுகளையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகிறோம்”

**-2006**

“எமது மக்கள் வரலாற்றிலே என்றுமில்லாதவாறு ஒரே தேசமாக, ஒரே மக்களாக ஒரே அணியில் ஒன்றுதிரண்டு நிற்கின்றனர். ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாக, ஒன்றுபட்ட இனமாகத் தமக்கு முன்னால் எழுந்த எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து நிற்கின்றனர்”

**- 2007**

தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்துவருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்” **-2008**



# முதலாவது மாவீரர் தின உரையில் தலைவர் சொன்னது என்ன?

இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படை வீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படை வீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களை கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாளைக் கொண்டாடுவது வழக்கம். வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல்எமது விடுதலைப்போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில்வைப்பதால்எல்லோரும்அன்று எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாராணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக கொண்டாடுகிறோம். காலப் போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத ஓர் இனம் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்து விடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள்.

அதே வேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம். இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது.

எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்.”

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!.

(1989இல் முதலாமாண்டு மாவீரர் நாள் விழாவில் மேதகு பிராபாகரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியே மேற்படி உரையாகும். அன்று முதல் பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் உரையை 2008ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 20 ஆண்டுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.)





எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI



# மாவீரர் துயிலும் இல்லங்கள்



**மட்டக்களப்பு:**
தரவை
தாண்டியடி
கல்லடி
மாவடி

**கிளிநொச்சி:**
கிளிநொச்சி
முழங்காவில்
வவுனியா:
ஈச்சங்குளம்

**முல்லைத்தீவு:**
முள்ளியவளை
அலம்பில்
ஆலங்குளம்
வன்னி விளான்குளம்
விசுவமடு
இரணைப்பாலை

**அம்பாறை:**
கஞ்சிகுடிச்சாறு

**மன்னார்:**
ஆட்காட்டி வெளி
பண்டிவிரிச்சான்

**யாழ்ப்பாணம்:**
கோப்பாய்
கொடிகாமம்
சாட்டி (வேலணை)
எள்ளங்குளம்
உடுத்துறை

**திருகோணமலை:**
பெரியகுளம்
ஆலங்குளம்
உப்பாறு
தியாகவனம்

மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ் மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! - இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் - அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே
வணங்குகின்றோம் - உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது - எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் - அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியரசு(சு) என்றிடுவோம் - எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.


XD
XDream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# நியூயோர்க்கில் ஒரு புதிய சகாப்தம்: குடியேற்றவாசிகளின் குரலாவாரா மம்தானி?



● ஐங்கரன் விக்கினேஸ்வரா

நியூயோர்க்கின் முதலாவது முஸ்லிம் மேயராக இந்திய வம்சாவளியினரான மம்தானி தெரிவாகி உள்ளார்.

நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் பதவியேற்கும் மிகவும் வயது குறைந்தவராக இருக்கிறார்.

முன்பு மேயர் வேட்பாளராக ஜோஹ்ரான் மம்தானி இருந்த வேளையில் அவரின் முக்கியமான பிரசாரங்களில் நெத்தன்யாகுவை கைது செய்வேன் என்றும் தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க்நகரின் 111வது மேயராக, 34 வயதே ஆன ஜோஹ்ரான் மம்தானி (Zohran Mamdani) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவர், முன்னாள் ஆளுநர் ஆண்ட்ரூ கியூமோவை தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளார்.

### முதல் இந்திய வம்சாவளி மேயர்:

அமெரிக்காவின் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்துள்ள ஜோஹ்ரன் மம்தானி ஒக்ரோபர் 18, 1991 இல் உகண்டாவின் கம்பாலா நகரில் இந்திய - முஸ்லிம் பின்னணி கொண்ட ஒரு குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். தனது ஏழாவது வயதிலேயே நியூயோர்க்கிற்கு குடிபெயர்ந்தவர்.

இந்தியாவின் சினிமாத் திரைப்பட இயக்குநராகிய மீரா நாயரது (Mira Nair) மகனான மம்தானியின் தந்தையார் மஹ்மூட் மம்தானி (Mahmood Mamdani) கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியர்.

இவ்வாறான புலம்பெயர் பின்னணி கொண்ட அவர் அமெரிக்காவின் மிக முக்கியமான நபராக மாறியிருக்கிறார். ஆம் நியூயோர்க் பெருநகரத்தின் முதல்வர் பதவியை வென்று தனதாக்கியுள்ளார்.

"நியூயோர்க் எப்போதும் புலம்பெயர்ந்தோரது நகரமாக இருந்து வருகிறது. அது புலம்பெயர்ந்தவர்களால் கட்டியெழுப்பப்பட்ட நகரம். புலம்பெயர்ந்தவர்களால் இயக்கப்படுகின்ற நகரம். இன்றிரவுடன் அது புலம்பெயர் வாசி ஒருவரது தலைமையின் கீழ் வந்துள்ள நகரம்" என தனது வெற்றி உரையில் பெருமையாகக் கூறியிருக்கிறார் ஜோஹ்ரன் மம்தானி.

8.5 மில்லியன் மக்கள் வசிக்கின்ற நியூயோர்க் நகரத்தின் மேயர் தேர்தல் பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் நடைபெற்று முடிந்துள்ளது. அதில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட மம்தானியை நியூயோர்க் வாசிகள் தங்களது அடுத்த முதல்வராகத் தெரிவுசெய்திருக்கின்றனர்.

அமெரிக்காவின் தீவிர இடதுசாரிகளிடையே மிகச் செல்வாக்கு மிக்க ஓர் அரசியல்வாதி மம்தானி. ஆயினும் அவர் ஒருநாள் நியூயோர்க் நகரத்தின் மேயராக வருவார் என்று யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

மிகச் சமீப காலத்தில் அறியப்பட்ட அரசியல் முகம்.

மம்தானியின் அதிரடியான வரவும், மம்தானியின் நியூயோர்க் அரசியல் பயணமும் அமெரிக்கா தாண்டி முழு உலகின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

டொனால்ட் ட்ரம்பின் கொள்கைகளை மிகக் கடுமையாக விமர்சித்து வருகின்ற மம்தானியின் வெற்றி வெள்ளை மாளிகையை அதிரவைத்துள்ளது.

அதிபர் ட்ரம்ப் தேர்தலுக்கு முன்பாக நியூயோர்க் நகருக்கு இராணுவத்தை அனுப்பி அதனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தீவிரமாக முயன்றிருந்தார். மம்தானியைக் கடுமையாகத் தாக்கிப் பேசிவந்தார். நியூயோர்க்கில் ஒரு கம்யூனிஸ்ட் வெல்வதை அனுமதிக்கப் போவதில்லை, அவரைக் கைதுசெய்வேன் என்றும் வெளிப்படையாகச் சூளுரைத்திருந்தார். இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே வேட்பாளராகிய மம்தானி தேர்தலில் வெற்றிவாகை சூடியுள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா மம்தானியின் வெற்றியை வாழ்த்தி வரவேற்றிருக்கிறார்.

### நெத்தின்யாகு வந்தால் கைது:

நியூயோர்க்குக்கு இஸ்ரேலிய பிரதமர் நெத்தின்யாகு வந்தால் கைதுசெய்வேன் எனவும் மம்தானி சூளுரைத்துள்ளார். அது மட்டுமல்ல இந்தியப் பிரதமர் மோடியை தனது நகரம் வரவேற்காது. குஜராத்தில் இஸ்லாமியர்கள் படுகொலைக்கு மோடியே காரணம் எனவும் காரசாரமாக விமர்சித்துள்ளார்.

ஜோஹ்ரான் சியோனிசவாதிகள் மீது காட்டமான விமர்சனம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது நியாயத்தை கதைத்தால் வாக்கு கிடையாது என்று ஒதுங்கும் அரசியல் தலைமைகள் தங்கள் ஒவ்வாமையை வெளிக்காட்டத் தொடங்கிவிட்டார்கள். அமெரிக்காவின் அதிகாரத்துவ கோட்டைக்குள்ளேயே சிறு புரட்சி நடக்கிறது என்றால் மிகையாகாது.

அத்துடன் பாலஸ்தீன விவகாரத்தில் ஜனநாயகக் கட்சியின் பெரும்பான்மைத் தலைவர்களிடம் இருந்து மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கிறார் மம்தானி. அவர் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும், இஸ்ரேலைத் தொடர்ந்து எதிர்த்தும்-விமர்சித்தும் வருகிறார்.



NEW YORK POST Page Six. SPORTS EXTRA

On your Marx, get set, Zo! Socialist Mamdani wins race for mayor

THE RED APPLE

PAGES 4-11

### நியூயோர்க்கில் ஒரு புதிய சகாப்தம்:

நியூயோர்க் மாநில அரசியலில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கியுள்ளது. முன்பு, சட்டமன்றத்தில் இடதுசாரிக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் மிகச் சிலரே இருந்தனர். ஆனால் இப்போது, அவர்களின் எண்ணிக்கை மற்றும் செல்வாக்கு இரண்டும் கணிசமாக வளர்ந்துள்ளன.

மம்தானி போன்ற இளைஞர்கள் அரசின் உள்ளே இருந்து கொண்டே அதன் செயற்பாட்டு முறைமைகளை மாற்ற செயற்பட்டார்கள். மம்தானி ஒரு பாரம்பரிய அரசியல்வாதி அல்ல. ஒரு "வீட்டுவசதி ஆலோசகர்" (housing counselor) ஆக, நியூயோர்க்கின் சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் வீட்டுவசதிப் பிரச்சினைகளை நேரடியாகக் கையாண்டவர். அந்த அனுபவம்தான் அவரது அரசியல் போராட்டத்தின் அடிப்படையாகும்.

பாரம்பரிய அரசியலில், கட்சி ஒற்றுமை முக்கியம். ஆனால் இவர்கள், தங்கள் கொள்கைகளுக்கு எதிரான சட்டங்களுக்கு எதிராக வாக்களிக்கத் தயங்குவதில்லை. இது பழைய அரசியல் முறைமையில் ஒரு சவால் என்று கருதப்படுகிறது.

மம்தானி மற்றும் அவரது சகாக்கள், அரசின் உள்ளே இருந்துகொண்டே, அதன் முக்கியமான கவனத்தை மாற்றுவதற்கான ஒரு நீண்டகால பயணத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களின் வெற்றி என்னவென்றால், அவர்கள் தங்கள் பதவியை, மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு ஒரு ஒலிபெருக்கியாகப் பயன்படுத்துகிறார்கள்.

இந்தப் போராட்டம் எளிதல்ல, ஆனால் அவர்கள் நியூயோர்க் அரசியலின் எதிர்கால முகத்தை ஏற்கனவே வடிவமைத்து வந்திருக்கிறார்கள்.

சோரான் மம்தானியின் வெற்றி, ஒரு தனிநபர் வெற்றி மட்டுமல்ல, ஒரு மக்கள் இயக்கத்தின் வெற்றியாகக் கருதப்படுகிறது.

அவரது முன்னாள் பணி அனுபவம், அவரது அரசியல் நம்பிக்கைகளுக்கு அடித்தளமாக அமைகிறது. இவர்களின் முக்கியமான பங்கு, அரசின் முக்கியமான கவனத்தை கூட்டுறவுத் துறையில் இருந்து சாதாரண மக்களின் பிரச்சினைகளுக்கு மாற்றுவதாகும்.

### ட்ரம்பை மதிக்காத நியூயோர்க் மக்கள்

நியூயோர்க்நகர மேயர் தேர்தலில் தன்னை கம்யூனிஸ்டாக அடையாளப்படுத்திக் கொண்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளரான மம்தானியை, அதிபர் டொனால்ட் டிரம்ப் கடுமையாக விமர்சித்ததோடு வாக்காளர்களையும் எச்சரித்தார்.

நியூயோர்க் நகர மேயர் தேர்தலில் கம்யூனிஸ்ட் வேட்பாளர் மம்தானி வெற்றி பெற்றால், நியூயோர்க் நகருக்கு மத்திய அரசின் நிதியை வழங்குவது சாத்தியமில்லை என அதிபர் குறிப்பிட்டு இருந்தார். நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், அதிபராக எனக்கு நியூயோர்க்கிற்கு நிறையப் பணம் கொடுப்பது கடினமாக இருக்கும், ஏனென்றால் உங்களிடம் ஒரு கம்யூனிஸ்ட் நியூயோர்க்கை நடத்தினால், அங்கு அனுப்பப்படும் பணம் வீணாகுவதற்கு சமமானது என குறிப்பிட்டார். ஆனால், இந்த எச்சரிக்கைகள் எதையும் பொருட்படுத்தாமல் நியூயோர்க் மக்கள் மம்தானிக்கு வாக்களித்து அடுத்த மேயராக்கியுள்ளனர்.

### ட்ரம்புக்கு பின்னடைவு:

இரண்டாவது முறையாக அதிபராக பொறுப்பேற்ற பிறகு, டிரம்ப் தன்னிச்சையாக பல அதிரடி முடிவுகளை வெளியிட்டு வருவது குடியரசு கட்சியையே இரண்டாக உடைத்துள்ளது. அவரது பிற்போக்குத்தனமான முடிவுகளை ஒரு தரப்பினர் ஆதரிக்க, மற்றொரு தரப்பினர் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியை சேர்ந்தவர்களும் இதே மனநிலையில் தான் உள்ளனர். இந்த சூழலில் மம்தானியின் வெற்றி ஜனநாயகக் கட்சியின் முற்போக்கான பிரிவுக்கு ஒரு உந்துகோலாக அமைந்துள்ளது.

தற்போது நியூயோர்க்கின் முதலாவது முஸ்லிம் மேயராக இந்திய வம்சாவளியினத்தவரான மம்தானி பதவி ஏற்றுள்ளார். நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் பதவியேற்கும் மிகம் வயது குறைந்தவராக இவர் பதவி ஏற்கின்றமை குறிப்பிடத்தக்கது.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# மாத ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இம்மாதம் கலவையான மாதமாக இருக்கும். வாழ்க்கையில் சில எதிர்பாராத சவால்களை நீங்கள் சந்திக்க நேரிடும். இந்த நேரத்தில், உங்கள் கோபத்தையும் பேச்சையும் கட்டுப்படுத்த வேண்டும். நீங்கள் அதில் வெற்றி பெற்றால், நீங்கள் விரும்பிய பலன்களை அடைவீர்கள். ஒழுங்கற்ற வழக்கங்கள் மற்றும் மோசமான உணவுப் பழக்கங்களும் உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். தேர்வுகள் மற்றும் போட்டிகளுக்குத் தயாராகும் மாணவர்கள் தங்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல் போகலாம்.

## இடபம்

எதிர்பாராத பெரிய செலவுகள் ரிஷபத்தின் நிதி வரவு செலவுத் திட்டத்தை சீர்குலைக்கலாம். வேலையில் இருப்பவர்கள் கூடுதல் பணிச்சுமையை எதிர்கொள்ள நேரிடும். தொழில், வணிகம் அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காக நீங்கள் நீண்ட அல்லது குறுகிய தூரம் பயணிக்க வேண்டியிருக்கும். நிலம் அல்லது சொத்து வாங்கும் போது அல்லது விற்கும் போது, அனைத்து ஆவணங்களையும் கவனமாகக் கையாளவும், ஏனெனில் இது பின்னர் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்கள் எந்த கவனக் குறைவையும் தவிர்க்க வேண்டும், ஏனெனில் இது உங்களின் வேலையை அழிக்கக்கூடும். வாக்குறுதிகளை அளிப்பதைத் தவிர்க்கவும். குடும்ப விஷயங்களைத் தீர்ப்பதில் குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு இல்லாதது உங்களை வருத்தப்படுத்தும். இந்த காலகட்டத்தில், கவனமாக வாகனம் ஓட்டுங்கள் மற்றும் உங்கள் உடல் நலத்தில் சிறப்பு கவனம் செலுத்துங்கள். வாழ்க்கையின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதில் உங்கள் துணை உதவியாக இருப்பார்.

## கடகம்

கடக ராசியில் பிறந்தவர்களுக்கு நவம்பர் மாதம் நல்ல அதிர்ஷ்டத்தைத் தரும். வியாபாரத்தில் நீங்கள் விரும்பிய லாபத்தைக் காண்பீர்கள், ஆனால் செலவுகள் இன்னும் வருமானத்தை விட அதிகமாக இருக்கும். பயணம் இனிமையாக இருக்கும், விரும்பிய வெற்றியைத் தரும். பயணத்தின் போது, செல்வாக்கு மிக்கவர்களுடன் தொடர்புகளை வளர்த்துக் கொள்வீர்கள், இது எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க நன்மைகளைத் தரும்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இம் மாதம் மிகவும் மங்களகரமானதாகவும் வெற்றிகரமாகவும் இருக்கும். தொழில் மற்றும் வணிகம் தொடர்பான பயணங்கள் இனிமையாக இருக்கும், விரும்பிய வெற்றியைக் கொடுக்கும். நிலம் மற்றும் கட்டிட விஷயங்கள் உங்களுக்கு சாதகமாக முடிவு செய்யப்படும். தேர்வுகள் மற்றும் போட்டிகளுக்குத் தயாராகும் மாணவர்கள் தங்கள் படிப்பிலிருந்து திசைதிருப்பப்படலாம். திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்.

## கன்னி

கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் கலவையான மாதமாக இருக்கும். குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களுடன் புனித யாத்திரை மேற்கொள்ளும் அதிர்ஷ்டமும் உங்களுக்கு இருக்கலாம். ஒரு குடும்ப உறுப்பினரின் பெரிய சாதனை வீட்டிற்கு மகிழ்ச்சியைத் தரும் அன்பின் அடிப்படையில் ஒரு நல்ல மாதமாக இருக்கும். உங்கள் துணையுடன் பரஸ்பர நம்பிக்கை அதிகரிக்கும்.

## துலாம்

துலாம் ராசியில் பிறந்தவர்கள் தங்கள் நேரத்தையும் பணத்தையும் செலவிட வேண்டியிருக்கும். எதிர்பாராத பெரிய செலவுகள் உங்கள் பட்ஜெட்டை சீர்குலைக்கக்கூடும். வேலை செய்பவர்கள் தங்கள் வேலையை மற்றவர்களிடம் ஒப்படைப்பதைத் தவிர்க்க வேண்டும். உங்கள் உடல்நலத்தில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். வெளிநாடுகளில் தொழில் மற்றும் வணிகங்களைத் தொடர்பவர்கள் விரும்பிய வெற்றியை அடையலாம். மாத இறுதியில் நிதி சிக்கல்கள் ஏற்படலாம்.

## விருச்சிகம்

விருச்சிக ராசியில் பிறந்தவர்கள் இந்த மாதம் தங்கள் உடல்நலம் மற்றும் உறவுகளில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். உடல்நலப் பிரச்சினைகளைப் புறக்கணிக்காதீர்கள், இல்லையெனில் நீங்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருக்கும். தொழிலதிபர்கள் குறிப்பிடத்தக்க ஏற்ற தாழ்வுகளைச் சந்திக்க நேரிடும். அதிக பணம் செலவிடுவது உங்கள் பட்ஜெட்டை சீர்குலைக்கலாம். காதல் உறவுகளைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு கலவையானதாக இருக்கும்.

## தனுசு

தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு நவம்பர் மாதம் பேரழிவு மற்றும் வாய்ப்பு இரண்டையும் தருகிறது. இருப்பினும், உங்கள் ஞானத்தால், ஒவ்வொரு பேரழிவையும் ஒரு சிறந்த வாய்ப்பாக மாற்றலாம். உங்கள் உடல்நலத்தில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். கடன், நோய் மற்றும் எதிரிகளிடமிருந்து நீங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். வேலையில் உள்ள ரகசிய எதிரிகள் உங்கள் வேலையை நாசப்படுத்த முயற்சிக்கலாம். இந்த காலகட்டத்தில் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

## மகரம்

நவம்பர் மாதம் மகர ராசிக்காரர்களுக்கு மகிழ்ச்சியையும் சோகத்தையும் தரும். தேர்வுகள் மற்றும் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கும் இந்த நேரம் மிகவும் சாதகமாக இருக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு புதிய வருமான ஆதாரங்கள் உருவாகும், மேலும் செல்வாக்கு மிக்க நபரின் உதவியுடன், அதிகாரம் மற்றும் அரசாங்கம் தொடர்பான நிலுவையில் உள்ள பணிகளை முடிப்பதில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். திருமணமான தம்பதிகளின் வாழ்க்கையில் அன்பும் நல்லிணக்கமும் மேலோங்கும்.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு தொழில், வணிகம் மற்றும் படிப்பில் சில தடைகளை சந்திக்க நேரிடும். வேலையில் இருப்பவர்கள் கவனக்குறைவாகவோ அல்லது தற்செயலாகவோ செய்யும் தவறுகளுக்கு தங்கள் மேலதிகாரிகளின் கோபத்தை எதிர்கொள்ள நேரிடும்.மூத்த குடும்ப உறுப்பினரின் உதவியுடன், நீங்கள் நிலைமையைச் சமாளித்து குடும்பப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அரசியலில் ஈடுபடுபவர்களுக்கு விரும்பிய பதவி அல்லது அதிக பொறுப்பு கிடைக்கலாம்.

## மீனம்

மீன ராசிக்காரர்கள் வேலையில் குறிப்பிடத்தக்க பணிச்சுமையை அனுபவிப்பார்கள். உங்கள் இலக்குகளை சரியான நேரத்தில் அடைய நீங்கள் கூடுதல் முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். இந்த காலகட்டத்தில் பருவ கால அல்லது நாள்பட்ட நோய்கள் ஏற்படக்கூடும் என்பதில் எச்சரிக்கையாக இருங்கள். எந்தவொரு திட்டத்திலும் முதலீடு செய்வதற்கு முன்பு அல்லது தங்கள் தொழிலை விரிவுபடுத்துவதற்கு முன்பு வணிகர்கள் தங்கள் நலம் விரும்பிகளின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

HavenHill
REAL ESTATE

# Thinking of Selling?
# Sell your home for only
# 1% Commision.

**We get you the best price, without the big commission — only 1%**

Call for a **free**, **no-obligation** market appraisal. **No hidden costs no gimmicks.** We look after **property management** as well.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au
Level 10, 14 Mason St, Dandenong VIC 3175

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au
Level 10, 14 Mason St, Dandenong VIC 3175

Terms and Conditions apply*


PARBOILED RICE
ATHAVAN
PRODUCTS
Jaffna
CURRY POWDER
PREMIUM
MOONG DAL
(Roasted)
Soya Meat
CHILLI POWDER
EVERYTHING
YOU NEED
ALL IN ONE PLACE!
FAST
DELIVERY
ஆதவன்
ATHAVAN
Cargo Service
Australia to
Sri Lanka
Sri Lanka to
Australia
BEST SERVICES:
Cargo & Shipping Services
Groceries & Household Items
Spices Export & Import
Pooja Products
Boutique Dress & Saree Collection
Contact Us For Details
Sri Ayyappa Pvt LTD
+61 449 722 392
40 David street, Dandenong VIC 3175, Australia
ஆதவன்
ATHAVAN
ஸ்ரீ
AYYAPPA
ATHAVAN